DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**OS. No. 40/2022**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW1 |
| Name | : | **சேகர்** |
| Father's Name | : | **திருநாவுக்கரசு** |
| Age | : | 57 |
| Religion | : | |
| Calling | : | |
| Caste | : | |
| Village | : | |
| Date | : | 22.01.2024 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் 1ம் வாதி. வழக்கு விசாரணையில் எனது சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் உண்மை தான். அதைப்படித்துப்பார்த்து தான் கையெழுத்து போட்டேன். 12.02.2007 தேதியிட்ட பிரதிவாதிகள் பெயரில் உள்ள ஏ செட்யூல் சொத்திற்கான கிரையபத்திரத்தின் அசல் **வா.சா.ஆ.1**. 10.12.2007 தேதியிட்ட வாதிகள் மற்றும் விஸ்வநாதன் மற்றும் சுப்பிரமணியன் ஆகிய 4 கூட்டாளிகளின் கூட்டாண்மை ஒப்பந்தபத்திரத்தின் அசல் **வா.சா.ஆ.2.** 11.12.2007 தேதியிட்ட ஏ செட்யூல் சொத்திற்கான 1ம் வாதி பெயரில் உள்ள பதிவு செய்யப்பட்ட பொது அதிகார பத்திரத்தின் அசல் **வா.சா.ஆ.3**. 14.12.2007 தேதியிட்ட பி செட்யூல் சொத்திற்கான 1ம் பிரதிவாதி விஸ்வநாதன் மற்றும் சுப்பிரமணி பெயரில் எழுதிக்கொடுத்த கிரையபத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4**. 07.09.2009 தேதியிட்ட தாவா சொத்திற்காக வாதிகள் பெற்ற வழக்கறிஞரின் சட்ட கருத்துரையின் அசல் **வா.சா.ஆ.5.** 07.09.2012 தேதியிட்ட ஏ செட்யூல் சொத்திற்கான 1ம் வாதி 2ம் வாதி பெயரில் எழுதிக்கொடுத்த கிரைய

உடன்படிக்கையின் அசல் **வா.சா.ஆ.6**. 23.03.2022 தேதியிட்ட 2 மற்றும் 3 பிரதிவாதிகள் 1ம் வாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அசல் **வா.சா.ஆ.7.** 05.04.2022 தேதியிட்ட வாதிகள் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய பதில் அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.8**. 09.06.2022 தேதியிட்ட 2 மற்றும் 3 பிரதிவாதிகள் 1ம் வாதிக்கு அனுப்பிய Rejoinder notice அசல் **வா.சா.ஆ.9.** 30.06.2021 தேதியிட்ட சுப்பிரமணியம் என்பவர் பிரதிவாதிகளுக்கும், 1ம் வாதிக்கும் அனுப்பிய கடிதம் அசல் **வா.சா.ஆ.10.** தாவாப்படி தீர்ப்பாகவேண்டும்.

( வா.சா.ஆ.2 ஆவணம் இந்த வழக்கிற்கு தொடர்புடையது அல்ல என்று பிரதிவாதிகள் தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞர்களால் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டு அந்த ஆட்சேபணைக்குட்பட்டு மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது) (வா.சா.ஆ.4 ஆவணத்தில் கண்டுள்ள நபர்களுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்றும் எனவே மேற்படி ஆவணம் இந்த வழக்கில் குறியீடு செய்யத்தக்கதல்ல என்று பிரதிவாதிகள் தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞர்களால் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டு அந்த ஆட்சேபணைக்குட்பட்டு மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது) (வா.சா.ஆ.10 ஆவணம் சுப்பிரமணியம் என்ற நபர் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய கடிதம் ஆனால் அந்த கடிதத்தை அனுப்பியதற்கான எந்தவிதமான அத்தாட்சி அல்லது ரசீது எதுவும் இணைக்கப்படவில்லை என்றும் எனவே மேற்படி ஆவணம் இந்த வழக்கில் குறியீடு செய்யத்தக்கதல்ல என்று பிரதிவாதிகள் தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞர்களால் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டு அந்த ஆட்சேபணைக்குட்பட்டு மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது) (மேற்படி ஆட்சேபணைகள் வழக்கு இறுதி விசாரணையின் போது இருதரப்பு வாதங்களின் அடிப்படையில் முடிவு செய்யப்படும்)

**குறுக்கு விசாரணைக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH